# இந்திய ரிசர்வ் வங்கி
# கரன்சி மேலாண்மைப் பிரிவு

## குடிமக்கள் அதிகாரப்பத்திரம்

### 1. குடிமக்கள் அதிகாரப்பத்திர குறிக்கோள்

இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) வழங்கும் ரூபாய் நோட்டுகள் மற்றும் நாணயங்கள் மாற்றம் குறித்த பற்பல வசதிகள், ஆர்பிஐ இஷ்யூ அலுவலகங்கள் மற்றும்அதன் குறிப்பிட்ட கிளைகள் வழங்கும் சேவைகள் குறித்த விபரங்களை குடிமக்கள் அதிகாரப்பத்திரம் வெளிப்படுத்துகிறது.

### 2. ஆர்பிஐ இஷ்யூ அலுவலகங்களில் கிடைக்கும் சேவைகள்

ஆர்பிஐ அலுவலகங்களில் எங்கெல்லாம் இஷ்யூ பிரிவுகள் இயங்கிக் கொண்டிருக்கின்றனவோ, அங்கே பொது மக்கள் தங்கள் அழுக்கடைந்த ரூபாய் நோட்டுகள் மற்றும் நாணயங்கள், வழக்கொழிந்தவையாக இருந்தாலும் அல்லது தேய்மானம் அடைந்திருந்தாலும் மாற்றிக் கொள்ளும் வசதியை அளிக்கிறது. இது போன்ற ஆர்பிஐ இஷ்யூ அலுவலகங்கள் நாணயம் மாற்றிக் கொள்ளும் வசதியை அங்கிருக்கும் நியமிக்கப்பட்ட கவுன்டர்கள் வேலை நேரங்களில் இலவசமாகச் செய்து கொடுக்க தேவையான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றன.

### 3. நாணய மாற்றம் செய்யும் வசதிகள் இருக்கும் ஆர்பிஐ அலுவலகப் பெயர்கள்

வங்கியின் மண்டல அலுவலகங்கள் இருக்கும் அஹமதாபாத், பங்களூரு, பேலாபூர் (நவி மும்பை), போபால், புவனேஷ்வர், சண்டிகர், சென்னை, கௌஹாத்தி, ஹைதிராபாத், ஜெய்பூர், ஜம்மு, கான்பூர், கொச்சி, கொல்கத்தா, லக்னவ், மும்பை, நாக்பூர், புது தில்லி, பட்னா மற்றும் திருவணந்தபுரம் ஆகிய இடங்களில் இந்த வசதிகள் கிடைக்கின்றன. ஆர்பிஐ அலுவலகங்கள் முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் விபரம் இணைப்புச் பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

### 4. அழுக்கடைந்த மற்றும் சிதைந்திருக்கும் ரூபாய் நோட்டுகள், நாணயங்களை வங்கியின் பொது கவுன்டர்களில் மாற்றுதல்

வங்கி அலுவலகங்கள் கவுன்டர்களில் இருந்து கீழ்காணும் வசதிகளை பொது மக்கள் பெற்றுக் கொள்ளலாம். இது போன்ற வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள், சேவைக் கட்டணங்கள் மற்றும் குறைதீர் அமைப்பு குறித்த விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

| வரிசை எண். | வழங்கப்படும் சேவைகள் | சேவைகளுக்கான வழிமுறைகள் | சேவைக் கட்டணம் | கால வரம்பு |
|---|---|---|---|---|
| I. | a) ரூபாய் நோட்டுகள், நாணயங்கள் மாற்றுதல், மற்றும்<br>b) குறைபாடுடைய ரூபாய் நோட்டுகளை கவுன்டரில் மாற்றுதல் (சிறிய எண்ணிக்கையில் மட்டும்) | ஒவ்வொரு அலுவலகத்திலும் ரூபாய் நோட்டுக்களை மாற்றிக் கொடுக்கும் கவுன்டர் வரிசைஎண்கள் அறிக்கையை பேங்கிங் பொது அறையில் வைக்கப்பட்டிருக்கும். இது போன்ற நியமிக்கப்பட்ட கவுன்டர்களில் அல்லது விசாரணை கவுன்டரில் நியமிக்கப்பட்ட கவுன்டர்களைப் பற்றிய விபரங்கள் பெற்றுக் கொள்ளலாம். ஏதாவது பிரச்னைகள் இருக்கும் பட்சத்தில் பேங்கிங் பொது அறையில் அறிவிக்கப்பட்டிருக்கும் நோடல் அதிகாரியுடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளுங்கள். | இலவசம் | வங்கி வேலை நேரத்தில் உடனடியாக மாற்றிக் கொடுக்கப்படும். பேங்கிங் பொது அறையில் வங்கி வேலை நேரம் அறிவிக்கப்பட்டிருக்கிறது அல்லது விசாரணை கவுன்டரில் இருந்தும் தெரிந்து கொள்ளலாம். |

| | | | | |
|---|---|---|---|---|
| II. | குறைபாடுடைய ரூபாய் நோட்டுகள் TLR கவர்களில் போட்டுக் கொடுக்கப்பட்டவை (பெரிய எண்ணிக்கையில்) மாற்றுதல் | நியமிக்கப்பட்ட கவுன்டரில் TLR கவர்கள் கேட்டுக் கொள்ளுங்கள் அல்லது விசாரணை கவுன்டரில் கூடுதல் விபரம் கேட்டுக் கொள்ளுங்கள்.<br>TLR கவரில் தேவைப்படும் விபரங்களை நிரப்புங்கள்.<br>மாற்றப்பட்ட தொகை அனுப்ப வேண்டிய வங்கி / கிளை / கணக்கு எண் ஆகியவற்றை TLR கவர் மீது குறிப்பிடுங்கள்.<br>மாற்றப்பட்ட மதிப்பு பொதுவாகக் கீழ்கண்ட வழிமுறைகளில் வழங்கப்படும்:<br>ECS கிரிடிட் : கேட்ப்புரிமை செய்திருப்பவரின் வங்கிக் கணக்கில் ECS மூலமாக வரவு வைக்கப்படும். இதற்கான ECS மேன்டேட் (ஆணை) ஆர்பிஐ-க்கு வழங்கியிருக்க வேண்டும்.<br>பேமென்ட் ஆர்டர் : கேட்ப்புரிமை செய்திருப்பவர் உள்ளூர்வாசியாக இருந்து ECS மேன்டேட் கொடுத்திருக்காத பட்சத்தில்.<br>டிமாண்ட் டிராஃப்ட்: கேட்ப்புரிமை செய்திருப்பவர் வெளியூர்வாசியாக இருக்கும் பட்சத்தில்.<br>மணி ஆர்டர்: கேட்ப்புரிமை செய்திருப்பவர் வெளியூர்வாசியாகவும், வங்கிக் கணக்கு வைத்திருக்காதவராகவும் இருக்கும் பட்சத்தில்.<br>5. சேதமடைந்த / துண்டுகளான ரூபாய் நோட்டுகள் டிரிப்பிள் லாக் ரிசெப்டாக்கிள் கவர்களில் அன்றாட வர்த்தக நேரங்கள் முடிவடைய ஒரு மணி நேரந்த்திற்கு ன்பு வரை பெற்றுக் கொள்ளப்படும்.<br>ஏதாவது பிரச்னைகள் இருக்கும் பட்சத்தில் விசாரணை கவுன்டர் அல்லது பேங்கிங் பொது அறையில் அறிவிக்கப்பட்டிருக்கும் நோடல் அதிகாரியுடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளுங்கள். | ECS இலவசம்.<br>மணி ஆர்டர் : ரூ.1000 வரையில் கட்டணம் இல்லை.<br>ரூ.1000 -க்கு அதிகமானால் தபால் ஆபீஸ் வசூலிக்கும் கமிஷன் தொகை மட்டும்.<br>டிமாண்ட் டிராஃப்ட்: அனுப்பப்படும் தொகைக்குப் பொருத்தமான எக்ஸ்சேஞ்ச் கட்டணங்கள் வசூலிக்கப்படும்.<br>பேமென்ட் ஆர்டர் : கட்டணம் இல்லை | ECS குறைபாடுடைய ரூபாய் நோட்டுகள் பெற்றுக் கொண்ட நாளில் இருந்து அடுத்த 4 வேலை நாட்களுக்குள் மாற்றப்பட்ட தொகை கேட்ப்புரிமை செய்தவரின் கணக்கில் வரவு வைக்கப்படும்.<br>MO/DD/PO: குறைபாடுடைய ரூபாய் நோட்டுகள் பெற்றுக் கொண்ட நாளில் இருந்து அடுத்த 4 வேலை நாட்களுக்குள் மாற்றப்பட்ட தொகை கேட்ப்புரிமை செய்தவருக்கு MO/DD/PO அனுப்பி வைக்கப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| III. | குறைபாடுடைய ரூபாய் நோட்டுகள் (துண்டுகள் மிகப் பெரிய எண்ணிக்கையில்) இன்சூர்ட் பார்சல் மூலமாக மாற்றுதலுக்காக அனுப்புதல் | குறைபாடுடைய நோட்டுகளை இன்சூர்ட் & பதிவுத் தபாலில் ஜெனரல் / டெபுடி மேனேஜர் பெயரில் சம்பந்தப்பட்ட இஷ்யூ அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். முகவரி விபரங்களை விசாரணை கவுன்டரில் அல்லது இந்திய ரிசர்வ் வங்கி வலைதளத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.<br>குறைபட்ட நோட்டுகள் அனுப்பும் போது அதனுடன் ஒரு லெட்டரில் அனுப்பியிருக்கும் ரூபாய் நோட்டுகள் விபரம், அனுப்பியவர் பெயர், முகவரி மற்றும் வங்கி கணக்கு விபரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட வேண்டும்.<br>மாற்றப்பட்ட தொகை மதிப்பை ECS மூலமாக வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.<br>மாற்றப்பட்ட தொகை மதிப்பு பேமென்ட் ஆர்டர் / கேட்பு காசோலை / மணி ஆர்டர் மூலமாகவும் வழங்கப்படும்.<br>ஏதேனும் பிரச்னை உண்டானால், சம்பந்தப்பட்ட இஷ்யூ அலுவலகத்தை தொலைபேசியில் அல்லது இமெயிலில் தொடர்பு கொள்ளலாம். இதன் விபரங்கள் இந்திய ரிசர்வ் வங்கி வலைதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. | வரிசைஎண் 2-ல் கொடுக்கப் பட்டிருப்பதைப் போன்றே. | ECS<br>குறைபாடுடைய ரூபாய் நோட்டுகள் கிடைக்கப் பெற்ற நாளில் இருந்து அடுத்த 15 வேலை நாட்களுக்குள் மாற்றப்பட்ட தொகை கேட்புரிமை செய்தவரின் கணக்கில் வரவு வைக்கப்படும்.<br><br>MO/DD/PO:<br>குறைபாடுடைய ரூபாய் நோட்டுகள் கிடைக்கப் பெற்ற நாளில் இருந்து அடுத்த 15 வேலை நாட்களுக்குள் மாற்றப்பட்ட தொகை கேட்புரிமை செய்தவருக்கு MO/DD/PO அனுப்பி வைக்கப்படும். |
| IV. | சிறப்புச் செல்யல்பாடுகள் கிழ் வரும் குறைபாடுடைய ரூபாய் நோட்டுகள் (எளிதாக நொறுங்கும் தன்மை அடைந்திருப்பது, மோசமாக எரிந்திருக்கிறது, சாம்பலாகிப் போயிருக்கிறது, பிரிக்க முடியாமல் சேர்ந்து ஒட்டிக் கொண்டிருக்கிறது ஆகிய காரணங்களால் மறுபடியும் கையாள முடியாமல் இருக்கிறது அல்லது அதன் உண்மையான அடையாளம் காலப்போக்கில் சிதைந்துவிடக் கூடியதாக இருக்கிறது) | விசாரனை கவுன்டரில் அல்லது AGM / மேனேஜர் கிளைம்ஸ் பிரிவுடன் தொடர்பு கொள்ளுங்கள். இதற்கான பிரத்தியேகப் படிவத்தை நிரப்பிக் கொடுங்கள்.<br>விண்ணப்பத்துடன் குறைபாடுடைய ரூபாய் நோட்டுகளைச் சேர்த்து கொடுக்கக் கூடாது.<br>கிளைம்ஸ் பிரிவு ரூபாய் நோட்டுகள் குறித்த தீர்ப்பு தேதி குறிப்பிட்டு உங்களுக்குத் தகவல் தெரியப்படுத்தும் வரையில் நீங்கள் காத்திருக்க வேண்டும்.<br>குறிப்பிட்டுச் சொல்லப்பட்ட அந்த தேதியில் குறைபாடுடைய ரூபாய் நோட்டுகளை நீங்கள் கிளைம்ஸ் பிரிவிற்கு எடுத்து வர வேண்டும். | வரிசைஎண் 2-ல் கொடுக்கப் பட்டிருப்பதைப் போன்றே. | வரிசைஎண் 2-ல் கொடுக்கப் பட்டிருப்பதைப் போன்றே. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறைபாடுடைய நோட்டுகள் மீது அளிக்கப்படும் தீர்ப்பு நடவடிக்கைகளை கேட்ப்புரிமை செய்தவர்கள் விரும்புப் பட்சத்தில் பார்வையிடலாம். குறைபாடுடைய நோட்டுகளை ஒட்டவோ / சரியாகப் பொருத்தவோ யல வேண்டாம். குறைபாடுகளுடன் அதனதன் நிலையிலேயே எடுத்து வரவும். | | |
| V | ரூபாய் நோட்டுகளை நாணயங்களாக நாணயம் வழங்கும் இயந்திரம் மூலமாக மாற்றுதல் | நாணயம் வழங்கும் இயந்திரத்தில் காட்டப்பட்டிருக்கும் நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். ஏதாவது பிரச்னை நேர்ந்தால் விசாரணை கவுன்டர் அல்லது நோடல் அதிகாரியுடன் தொடர்பு கொள்ளுங்கள். | இலசவம் | வங்கி வேலை நேரத்தில் இயந்திரம் உடனடியாக மாற்றிக் கொடுக்கும். |

**1. வாடிக்கையாளர் சம்பந்தப்பட்ட பிரச்னைகளை கவனித்துக் கொள்ளும் நோடல் அதிகாரி பெயர் ஒவ்வொரு இந்திய ரிசர்வ் வங்கி மண்டல அலுவலகங்களில் கிடைக்கும்.**

**2. குறையுற்றோர் குறைதீர்த்தல்**

கவுன்டர்களில் உங்களுக்குக் கிடைத்த சேவைகள் ஒரு வேளை உங்களுக்குத் திருப்திகரமாக இல்லாவிட்டால் அல்லது வங்கி அளிக்கும் சேவைகளில் அபிவிருத்தி செய்யும் வகையில் நீங்கள் ஆலோசனை கூற விரும்பினால், உங்கள் குற்றச்சாட்டுகள் / ஆலோசனைகளை எங்களுக்கு கீழ்கண்ட வழிகளில் நீங்கள் அனுப்பலாம்:

- **i.** பேங்கிங் பொது அறையில் வைக்கப்பட்டிருக்கும் ஒளி ஊடுருவும் கடிதங்கள் பெட்டியில் உங்கள் குற்றச்சாட்டுகள் / ஆலோசனைகளைப் போடலாம்.
- **ii.** விசாரணை கவுன்டரில் வைக்கப்பட்டிருக்கும் குற்றச்சாட்டு / ஆலோசனைப் பதிவேட்டில் உங்கள் குற்றச்சாட்டு / ஆலோசனைகளை நீங்கள் எழுதி வைக்கலாம்.
- **iii.** உங்கள் குற்றச்சாட்டு / ஆலோசனைகளை தபால் / கொரியர் மூலமாக பொது மேலாளர் / உதவி பொது மேலாளர், இஷ்யூ பிரிவு, இந்திய ரிசர்வ் வங்கி முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.
- **iv.** உங்கள் குற்றச்சாட்டு / ஆலோசனைகளை எங்களுக்கு helpdcm@rbi.org.in என்ற இமெயில் முகவரியில் அனுப்பி வைக்கலாம்.
- **v.** நேரடியாகவோ அல்லது தொலைபேசியிலோ கீழ்காணும் அதிகாரிகளுடன் குறையுற்றோர் குறைகளைத் தீர்த்து கொள்ள நீங்கள் தொடர்பு கொள்ளலாம்:

| வரிசை எண். | அதிகாரி பெயர் | பதவி | முகவரி | தொலைபேசி எண். | இமெயில் கவரி |
|---|---|---|---|---|---|
| 1. | | பொது மேலாளர் | | | |
| 2. | | துணை பொது மேலாளர் | | | |
| 3. | | உதவி பொது மேலாளர் | | | |
| 4. | | டிரெஷரர் | | | |

(vi) உங்கள் குற்றச்சாட்டு / ஆலோசனைகள் பெற்றுக் கொண்டதற்கான அறிவிப்பு உடனடியாகச் செய்யப்பட்டு, உங்கள் கடிதம் கிடைத்த நாளில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் பொருத்தமான நடவடிக்கை அதன்மீதான குற்றச்சாட்டு நிவர்த்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. **சேவைகளுக்கான பொது நிபந்தனைகள்**

(i) சேதமடைந்த / துண்டாகிப் போன ரூபாய் நோட்டுகள் மாற்றிக் கொடுக்கும் சேவை இந்திய ரிசர்வ் வங்கி (நோட் ரீஃபண்ட்) விதிகள் பிரகாரம் செய்யப்படும் ஒரு சிறப்புச் செய்கை. சேதமடைந்த / துண்டாகிப் போன ரூபாய் நோட்டு விதிகள் பிரகாரம் மாற்றப்பட்டு திருப்பிக் கொடுக்க இயலாதபோது, அவை நிராகரிக்கப்பட்டு, நோட்டுகள் கொடுத்தவருக்கு நிராகரித்தல் அறிவிப்பு கொடுக்கப்படும். நிராகரிக்கப்பட்ட நோட்டு வங்கியிலேயே வைத்திருந்து நான்கு மாதங்களுக்குப் பிறகு அழிக்கப்பட்டுவிடும். இது போன்று பாதுகாத்து வைத்துக் கொள்ளும் நான்கு மாத கால கட்டத்தில் நோட்டைக் கொடுத்தவர் இஷ்யூ அலுவலகத்திடம் மறு ஆய்வுக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

(ii) ரூபாய் நோட்டுகள் / நாணயங்கள் போலியாக / கள்ளத்தனமாகச் செய்யப்பட்டவை எனக் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அவை பறிமுதல் செய்யப்பட்டு அதற்கான எந்த மதிப்பும் கொடுக்கப்பட மாட்டாது. இது போன்ற நோட்டுகள் / நாணயங்கள் வங்கியிலேயே பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டு, நோட்டுகள் வழங்கியவருக்கு ஒரு அறிக்கை கொடுக்கப்படும்.

(iii) பொதுமக்கள் வசதிக்காக ஆர்பிஐ வழங்கியிருக்கும் ரூபாய் நோட்டுகளின் பாதுகாப்பு சிறப்பம்சங்கள் குறித்த விபரங்கள் வங்கியின் http://rbi.org.in/currency/banknotes.html வலைதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

(iv) நோட்டுகள் மற்றும் நாணயங்கள் தேவை என கோரப்படும் அளவு வாடிக்கையாளர்களின் வர்த்தக / சொந்த தேவைகளைப் பொருத்த அளவிலேயே இருக்க வேண்டும்.

8. **அழுக்கடைந்த மற்றும் சிதைந்த ரூபாய் நோட்டுகள், நாணயங்களை வர்த்தக வங்கி கவுன்டர்களில் மாற்றிக் கொள்ளுதல்**

(i) ரிசர்வ் வங்கி அலுவலகங்கள் குறிப்பிட்ட சில மையங்களில் செயல்பட்டு வருகின்றன. ஆகையால், அழுக்கடைந்த நோட்டுகளை மாற்றுதல், நோட்டுகளை நாணயங்களாக மாற்றுதல், நாணயங்களை நோட்டுகளாக மாற்றுதல் வசதிகளை அட்டவணையிடப்பட்ட வர்த்தக வங்கி கிளைகளிலும் செய்வதற்கான வசதிகளை வங்கி செய்திருக்கிறது. அழுக்கடைந்த நோட்டுகள் மாற்றப்படும் வசதிகள் அனைத்து பொதுத்துறை வங்கிகள் மற்றும் தனியார் துறை வங்கிகள் கிளைகளில் கிடைத்துக் கொண்டிருக்கும் என்றாலும், சேதமடைந்த / துண்டாகிப் போன ரூபாய் நோட்டுகளை மாற்றும் வசதி குறிப்பிட்ட ஒரு சில வர்த்தக வங்கி கிளைகளில் மட்டுமே கிடைக்கின்றன. சேதமடைந்த ரூபாய் நோட்டுகள் மாற்றப்படும் வசதிகள் இருக்கும் நிர்ணயிக்கப்பட்ட வங்கி கிளைகள் பட்டியல் ஆர்பிஐ அலுவலக விசாரணை கவுன்டரில் கிடைக்கும். இவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட வங்கி கிளைகள் சேதமடைந்த ரூபாய் நோட்டுகள் மாற்றிக் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பை நோட்டீஸ் போர்டில் காட்சியாக வைக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு கட்டளைக் குறிப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. இது போன்று நிர்ணயிக்கப்பட்ட வங்கி கிளைகள் ஏதாவது ஒன்று மாற்றிக் கொடுக்கும் வசதியை மறுக்கும் போது, பாதிக்கப்பட்ட பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அந்த வர்த்தக வங்கியின் நிருவாக இயக்குனர் / சிஇஓ விடம் முறையிடலாம். ஒரு வேளை இந்த முறையீடு தீர்க்கப்படவில்லை என்றால், இதைக் குறித்த விபரம் இந்திய ரிசர்வ் வங்கியின் சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரலாம்.

(ii) மற்ற வங்கிகளின் கிளைகள், அதாவது கூட்டுறவு வங்கிகள் மற்றும் மண்டல கிராமீய வங்கிகளும் அவர்கள் சௌகரியத்தைப் பொருத்து நோட்டுகளையும் நாணயங்களையும் மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனாலும், சேதமடைந்த நோட்டுகளை மாற்றிக் கொடுக்கும் அதிகாரம் அவர்களிடம் இல்லை.

9. **ஆலோசனைகள் / கருத்துகள்**

குடிமக்கள் அதிகாரப்பத்திரம் குறித்து பொதுமக்களில் யாருக்காவது ஏதாவது ஆலோசனைகள் / கருத்துகள் வழங்க இருக்கும் பட்சத்தில், முக்கிய பொது மேலாளர், கரன்சி மேலாண்மைத் துறை, இந்திய ரிசர்வ் வங்கி, மத்திய அலுவலகம், அமர் பில்டிங், 4ம் மாடி, சர். பி.எம். ரோடு, ஃபோர்ட், மும்பை- 400 001 என்ற முகவரிக்கு அவர் எழுதலாம்.

**ANNEX**

## ஆர்பிஐ இஷ்யூ அலுவலகங்கள் மற்றும் அவர்கள் அதிகார எல்லைகள்

| வரிசை எண். | ஆர்பிஐ அலுவகப் பெயர் மற்றும் முகவரி | அதிகார எல்லை |
|---|---|---|
| 1. | ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>2ம் மாடி, காந்தி பாலம் அருகில்,<br>அஹமதாபாத் 380 014 | குஜராத் மாநிலம் மற்றும் தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி, தாமன் மற்றும் டையு யூனியன் பிரதேசங்கள் |
| 2. | ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி,<br>இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>10/3/8, நிருபதுங்கா ரோடு,<br>பங்களூரு - 560 001 | கர்நாடகா மாநிலம் |
| 3. | டெபுடிஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>பண்டிட் ஜவஹர்லால் நேரு மார்க்,<br>தபால் பெட்டி எண்.16,<br>புவனேஷ்வர் - 751 001. | ஒரிசா மாநிலம் |
| 4. | ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி,<br>இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>மெய்ன் பில்டிங், ஷாஹித் பகத் சிங் மார்க்,<br>ஃபோர்ட், மும்பை - 400 001. | மும்பை மாநகரம், அதாவது மும்பை மற்றும் அதன் புறநகர் பகுதிகள் (சுமாராக மேற்கு ரயில்வே தஹிசரிலிருந்து மத்திய ரயில்வே முலுண்டு வரை தொடர்பு படுத்தும் எல்லைக் கோடு வரை) |
| 5. | டெபுடி ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>ஹொஷங்காபாத் ரோடு,<br>தபால் பெட்டி எண். 32<br>போபால் - 462 011 | மத்திய பிரதேச மாநிலம் |
| 6. | டெபுடி ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி,<br>இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>பிளாட் எண். 3, செக்டர் 10,<br>எச்.எச். நிர்மலா தேவி மார்க்,<br>சிபிடி, பேலாபூர்,<br>நவி மும்பை - 400 614. | மஹாராஷ்ட்ரா மாநிலத்தின் அஹமத்நகர், கோலாபூர், நாசிக், புனே, ராய்கட், ரத்னகிரி, சாங்லி, சதாரா, சிந்துதுர்க், சோலாபூர் மற்றும் தானே மாவட்டங்கள் மற்றும், கோவா மாநிலம் |
| 7. | டெபுடி ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>சென்ட்ரல் விஸ்டா,<br>டெலிபோன் பவன் எதிரில்<br>செக்டர் 17, சண்டிகர் - 160 017 | ஹரியானா, ஹிமாச்சல் பிரதேசம், பஞ்சாப் மற்றும் சண்டிகர் யூனியன் பிரதேசம் |
| 8. | டெபுடி ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>ஃபோர்ட் கிளேசிஸ் நெ.146,<br>ராஜாஜி சாலை,<br>தபால் பெட்டி எண். 40,<br>சென்னை - 600 001 | தமிழ் நாடு மாநிலம் மற்றும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசம். |

| வரிசை எண். | ஆர்பிஐ அலுவகப் பெயர் மற்றும் முகவரி | அதிகார எல்லை |
|---|---|---|
| 9. | ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>ஸ்டேஷன் ரோடு, பான்பஜார்,<br>தபால் பெட்டி எண். 120,<br>கௌஹாத்தி - 781 001 | அஸ்ஸாம் மாநிலம்,<br>அருணாச்சல பிரதேஷம்,<br>மணிப்பூர், மெகாலயா,<br>மிசோரம், நாகாலாந்து மற்றும்<br>திரிபுரா |
| 10. | ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>6-1-65, செகரடேரியர் ரோடு, சாய்ஃபாபாத்,<br>ஹைதராபாத் - 500 004 | ஆந்திர பிரதேச மாநிலம் |
| 11. | டெபுடி ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>ரெய்ல் ஹெட் காம்ப்ளெக்ஸ்<br>ஜம்மு - 180 012. | ஜம்மு மற்றும் காஷ்மீர்<br>மாநிலம் |
| 12. | ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>ராம்பாக் சர்க்கிள், டோங்க் ரோடு,<br>தபால் பெட்டி எண். 12,<br>ஜெய்பூர் - 302 004 | ராஜஸ்தான் மாநிலம் |
| 13. | ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>எம்.ஜி. ரோடு, தபால் பெட்டி எண். 82/142,<br>கான்பூர் - 208001 | உத்தர பிரதேசம் மற்றும்<br>உத்தராஞ்சல் மாநிலங்கள் |
| 14. | ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>தபால் பெட்டி எண். 49<br>கொல்கத்தா - 700 001 | சிக்கிம், மேற்கு வங்காளம்<br>மாநிலம் மற்றும் அந்தமான்<br>மற்றும் நிகோபர் யூனியன்<br>பிரதேசத் தீவுகள் |
| 15. | ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மென்ட்<br>மெயின் ஆபீஸ் பில்டிங்<br>டா. ராகவேந்திர ராவ் ரோடு,<br>தபால் பெட்டி எண். 15<br>சிவில் லைன்ஸ், நாக்பூர் - 440 001 | சத்தீஸ்கர் மாநிலம் மற்றும்<br>மஹாராஷ்டிரா மாநிலத்தின்<br>அகோலா, அமராவதி,<br>அவுரங்காபாத், பீட், பந்தாரா,<br>புல்தானா, சந்தரபூர், துலே,<br>கட்சிரோலி, ஹிங்கோலி,<br>ஜல்காம், ஜல்னா, லாதூர்,<br>நாக்பூர், நாந்தெட்,<br>ஒஸ்மனாபாத், பர்பானி, வர்தா,<br>யாவத்மால் மாவட்டங்கள் |

| வரிசை எண். | ஆர்பிஐ அலுவகப் பெயர் மற்றும் முகவரி | அதிகார எல்லை |
|---|---|---|
| 16. | ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மெண்ட்<br>6, சன்சத் மார்க்,<br>புது தில்லி - 110 001 | தில்லி மாநிலம் |
| 17. | டெபுடி ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மெண்ட்<br>தெற்கு காந்தி மைதானம்,<br>தபால் பெட்டி எண். 162,<br>பட்னா - 800 001 | பீகார் மற்றும்<br>ஜார்கண்ட் மாநிலங்கள் |
| 18. | டெபுடி ஜெனரல் மேனேஜர்<br>இந்திய ரிசர்வ் வங்கி, இஷ்யூ டிபார்ட்மெண்ட்<br>பேக்கரி ஜங்க்ஷன்,<br>தபால் பெட்டி எண். 6507,<br>திருவணந்தபுரம் - 695 033. | கேரளா மாநிலம் மற்றும்<br>லக்ஷதிவீப் யூனியன்<br>பிரதேசம் |